STC 131/2024 PW1 : கதிரேசன்

த/பெ போதைராஜ் தேதி 19.02.2026

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை :**

நான் BE Civil Engineering படித்துள்ளேன். நான் விபரம் சொல்லி தான் என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் இந்த நிரூபண வாக்குமூலம் ஆகியவை தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் 13 வருடங்களாக கட்டிடம் கட்டுமான தொழில் செய்து வருகிறேன். நான் 100க்கு மேற்பட்ட கட்டிடங்கள் கட்டியுள்ளேன். மேற்படி என்னுடைய தொழில் சம்பந்தமான முறையான ஆவணங்கள் அனைத்தும் பராமரித்து வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் பழைய ஆவணங்கள் அழிக்கப்பட்டுவிட்டன.தற்சமயம் மூன்று ஆவணங்கள் மட்டும் கைவசம் உள்ளது. அந்த மூன்று ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். நான் வங்கியில் 10 வருடங்களாக கணக்கு வைத்துள்ளேன். என்னுடைய கட்டுமான தொழிலில் வரும் வருமானத்தை வங்கியில் செலுத்தி பரிவர்த்தனை செய்வேனா என்றால் சிலர் வாடிக்கையாளர்கள் பணத்தை நேரடியாக கொடுப்பதால் அதை கட்டுமான பொருட்கள் வாங்குவதற்கும் செலவு செய்துவிடுவேன். மீத பணம் இருந்தால் அதை வங்கியில் செலுத்திவிடுவேன். கட்டுமான பொருட்கள் வாங்கியதற்கான ரசீதை வைத்துள்ளேனா என்றால் கட்டுமான பணி முடிந்தவுடன் அந்த ரசீது கோப்புகளை வாடிக்கையாளர்களிடம் கொடுப்போம் அவர்கள் கேட்கவில்லை என்றால் அதை அழித்துவிடுவோம்.

2) நான் வருடந்தோறும் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. நான் எதிரிக்கு 15,50,000/– எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொன்னதை எனது வருமான வரி கணக்குகளில் காட்டியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி ஓட்டுநர் அழகர்சாமியின் இரண்டாவது மனைவி என்றால் சரிதான். முதல் மனைவிக்கு இரண்டு மகன்கள் என்றால் சரிதான். மூத்த மகன் அருண் என்னுடன் படித்தார் என்றால் சரிதான். மேற்படி அருணும் நானும் கடந்த 2010 முதல் 2013 ஆண்டு வரை டிப்ளமோ படிப்பு ஒன்றாக ஒரே கல்லூரியில் படித்தோம். மேற்படி அருண் தற்போது ஓட்டுநர் பயிற்சி பள்ளியில் வேலை பார்த்து வருகிறார். 2 வது மகன் திரவியம் தற்போது வழக்கறிஞராக உள்ளார். எதிரி மேற்படி அருண் மற்றும் திரவியத்தின் சித்தி

என்றால் சரிதான். எனவே மேற்படி எதிரி என்னிடம் பணம் கேட்ட போது அந்த விசியத்தை மேற்படி அருண் மற்றும் திரவியத்திடம் தெரிவித்தேனா என்றால் என்னிடம் எதிரியும் அருணும் வந்து பணம் கேட்டார்கள். திரவியத்திடம் மேற்படி தகவலை சொல்லவில்லை. குடும்ப செலவிற்காக பணம் கேட்டார்கள். மேற்படி எதிரியும் மேற்படி அருண் மற்றும் திரவியமும் ஒரே கூட்டு குடும்பமாக வாழ்கிறார்களா என்றால் தனித்தனியாக வாழ்ந்து வருகிறார்கள். என்னுடைய அறிவிப்பில் எதிரியும் மேற்படி இரண்டு நபர்களும் கூட்டு குடும்பமாக இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதை போல் எனது அறிவிப்பில் அதற்கு மாறாக மேற்படி நபர்கள் தனித்தனி குடும்பமாக வாழ்ந்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு மேற்படி நபர்கள் கூட்டு குடும்பமாகவோ அல்லது தனி குடும்பமாகவோ வாழ்ந்து வருவது எனக்கு தெரியாது என்பதால் மேற்படி எனது அறிவிப்பில் முரண்பாடாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

3) பணம் கொடுப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பே எதிரி என்னிடம் கடன் கேட்டார். எதிரி குடும்ப செலவிற்காக கடன் கேட்டார் என்று எனது அறிவிப்பில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். குடும்ப செலவிற்காக எதிரி பணம் கேட்டதை எதிரி திரவியத்திடம் நான் ஏன் சொல்லவில்லை என்றால் மேற்படி திரவியத்திற்கு மேற்படி விபரம் தெரியும். வா.சா.ஆ.5 அறிவிப்பில் எனது கையொபத்திற்கு கீழ் உள்ள எழுத்துக்கள் நான் எழுதியது தான் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 காசோலையில் உள்ள என்னுடைய பெயர் நான் எழுதியதா என்றால் இல்லை எதிரி தான் எழுதினார். காசோலையில் உள்ள பெயரையும் மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள பெயரையும் நான் தான் எழுதினேன் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. காசோலையை எனது அலுவலகத்தில் வைத்து நிரப்பினார்களா என்றால் இல்லை ஏற்கனவே நிரப்பி கொண்டு வந்தார்கள். காசோலையில் கதிரேசன் என்ற பெயர் , தேதி, எண்ணால் எழுதப்பட்ட தொகை ஆகியவை ஒரே மையினாலும் எழுத்தால் எழுதப்பட்ட தொகை வேறொரு மையினாலும், எதிரி பாண்டீஸ்வரியின் கையெழுத்து வேறொரு மையினாலும் எழுதப்பட்டது என்றால் சரிதான். 14.03.2024ம் தேதியில் நான் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு 15.03.2024ம் தேதி திருப்பப்பட்டது. பின்னர் 20.03.2024ம் தேதி மீண்டும் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி இரண்டு அறிவிப்பு ஒரே முகவரிக்கு அனுப்பினேன்

என்றால் சரிதான். மேற்படி இரண்டு அறிவிப்புகள் அனுப்பியது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. எனது நண்பர் அருணின் தகப்பனார் அழகர்சாமி எந்த வருடம் இறந்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. அவருடைய இறப்பிற்கு சென்றேனா என்றால் சென்றேன். மேற்படி அழகசர் சாமியின் இறுதி காரியங்களை மேற்படி அவரது மகன் இருவரும் சேர்ந்தே செய்தார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி இரண்டு மகன்களும் சேர்ந்து தான் இறுதி சடங்குகளை செய்தார்கள் என்றாலும் அந்த விபரங்கள் எனக்கு தெரியும் என்றாலும் சரியல்ல. மேற்படி அழகர் சாமி அரசு போக்குவரத்து ஓட்டுநராக பணிபுரிந்ததால் அவருடைய வாரிசு வேலை யாருக்கு கிடைக்க வேண்டும் என்பது மேற்படி இரண்டு மகன்களுக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் தெரியாது.

4) மேற்படி பிரச்சனை வந்ததால் எனது நண்பர் அருண் வீட்டில் இருந்த எதிரியின் காசோலையை எடுத்து வந்து என்னை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரி குடும்ப செலவிற்காக என்னிடம் கடன் வாங்கவும் இல்லை வாங்க வேண்டிய அவசியமும் இல்லை என்றால் சரியல்ல. நான் எனது நண்பர் அருண் கேட்டுகொண்டதற்கிணங்க நான் கொடுக்காத கடனுக்கு இந்த காசோலையை பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துளளேன் என்றால் சரியல்ல. நான் 100 க்கு மேற்பட்ட வீடுகளை கட்டியதாக சொல்வது பொய் என்றாலும் நான் 2 வீடுகள் மட்டும் தான் கட்ட ஆரம்பித்தேன் என்றாலும் அதுவும் பிரச்சனை ஏற்பட்டு பாதியில் நிறுத்தப்பட்டு தற்போது நான் கட்டிட தொழில் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் 100 வீடுகள் கட்டியிருந்தார்கள் அதற்கான முறையான ஆவணங்களை கோப்புகளாக பராமரித்து வருவேன் என்றாலும் அதை போல் தவறாமல் வருமான வரி கட்டியிருப்பேன் என்றாலும் சரியல்ல.

S.d. Kathiresan
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.